Registered as a news paper.

பக்கங்கள் : எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 20 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 04 (03.05.2006) புதன்கிழமை இதழ் 215

Dialog டயலொக் டயலொக்

kit

100/-.400/-.1000/- விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டு பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

எந்நேரமும் உன்னுடன்....

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும், இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Sri Murugan
Tele Communication & Agency
Post Office,
303. K.K.S. Road, Jaffna.


T.P : 021 222 5392,
Fax : 021 222 3214
E.Mail : srimurugan@eureka.lk

# 'உதயன்' அலுவலகத்துக்குள் ஆயுதபாணிகள் வெறியாட்டம்

## இருவர் சுட்டுக்கொலை – இருவர் படுகாயம்!



சந்தைப்படுத்தல் முகாமையாளர் சுரேஷ்



யாழ்ப்பாணம் —

யாழ்.நகரிலுள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் நேற்றிரவு உட்புகுந்து ஆயுதபாணிகள் மேற்கொண்ட கண்மூடித் தனமான துப்பாக்கிச்சூட்டில் இரு ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 7.35 மணியளவில் இடம் பெற்ற இந்தக் கோரச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுதம் தாங்கிய 5 நபர்கள் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.


கறுப்பு உடையில் வந்த இந்த ஆயுதபாணிகளில் ஒருவர் கைத்துப்பாக்கியையும் 4 பேர் தன்னியங்க துப்பாக்கிகளையும் வைத்திருந்தனர்.

இவர்கள் அலுவலக வாயிலில் நின்ற பாதுகாப்பு ஊழியரை மிரட்டி மேசையில் படுக்குமாறு பணித்துவிட்டு உள்ளே



விநியோகப் பகுதியைச் சேர்ந்த ரஞ்சித்

## ஊடக அமைச்சரின் இரவு விருந்தை



சுட்டு நொருக்கப்பட்ட கணினிகள்

இவர்கள் அலுவலக வாயிலில் நின்ற பாதுகாப்பு ஊழியரை மிரட்டி மேசையில் படுக்குமாறு பணித்துவிட்டு உள்ளே நுழைந்து சந்தைப்படுத்தல் முகாமையாளரை சுட்டுக்கொன்ற பின்னர் பத்திரிகை மடிக்கும் பகுதிக்குள் சென்றனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

விநியோகப் பகுதியைச் சேர்ந்த ரஞ்சித்

# விடுதலைப் புலிகள் கண்டனம்!

கிளிநொச்சி —

உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் ஆயுதக்குழுவினர் மேற்கொண்ட தாக்குதலை விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தால் நேற்றிரவு கண்டன அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுயாதீனமாகச்செயற்படும் தமிழ் ஊடகங்களுக்கு அரச படைகளும் அதன் துணைப்படைகளும் விடுத்துவரும் அச்சுறுத்தலின் தொடர்ச்சியாக நேற்று யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. அதன் இரண்டு பணியாளர்கள் கொல்லப்பட்டனர். ஏற்கனவே யாழ்.குடாநாட்டில் நடுநிலைமையோடு செற்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நடுநிலைமைகளுடன் ஊடகங்கள் உண்மைகளை தோலுரித்துக் காட்டும் சந்தர்ப்பங்களில் எதிரிகளால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. இதன் பிரதிபலிப்புக்களாக மட்டக்களப்பில் நாட்டுப்பற்றாளர் ஜீ.நடேசன், கொழும்பில் மாமனிதர் டி. சிவராம்(தராகி), திருகோணமலையில சு.சுகிர்தராஜன் ஆகிய பத்திரிகையாளர்கள் அரசின் ஆசீர்வாதத்துடன் கொல்லப்பட்டனர்.

இறுதியாக நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் ஆசிரியரைத் தேடிச்சென்ற படையினரும், துணைக்குழுவினரும் அவர் எதிர்ப்படாமையால் இரண்டு பணியாளர்களை சுட்டுக்கொன்றனர்.

மேலும், இந்தச் சம்பவத்தில் இரண்டு பணியாளர்கள் படுகாயமடைந்தனர். உதயன் பத்திரிகையை இயங்கவிடாமல் செய்வதற்கு கடந்த காலங்களில் அரசபடைகள் பலத்த பிரயத்தனங்களை செய்திருந்தன.

விமானத்தாக்குதலுக்கும் கூட அதன் பணிமனை இலக்கானது. இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருந்துகொண்டு அதன் அட்டூழியங்களை வெளிக்கொணர்ந்ததற்காக படையினர் அதை சீல் வைத்து மூடியிருந்தனர். இப்போது உதயன் பத்திரிகையை இயங்கவிடாமல் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் உட்புகுந்து படுகொலையைச் செய்ததுடன் அதன் அலுவலக உபகரணங்களையும் அடித்து சேதப்படுத்தியிருக்கின்றனர். சர்வதேச ரீதியாக (08 ஆம் பக்கம் பார்க்க)

தற்போதைய அசாதாரண நிலை காரணமாக இன்றைய நாளிதழ் 8 பக்கங்களுடன் வெளியாகிறது.

அத்துடன் பக்க ஒழுங்கில் மாற்றங்கள் செய்யப்பட்டதால் இலக்கங்கள் மாறியுள்ளன. வாசகர்கள் பொறுத்தருளுமாறு கேட்டுக்கொள்கிறோம். - பிரதம ஆசிரியர்.

# ஊடக அமைச்சரின் இரவு விருந்தை புறக்கணித்த ஊடகவியலாளர்கள்!

கொழும்பு —

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பாவின் வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரத் துக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் - உதயன் அலுவலகம் மீதான தாக்கு தலை அறிந்ததும் அங்கிருந்து வெளியேறினர்.

சுதந்திர ஊடக இயக்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் பலர் நேற்றிரவு அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவினால் விருந்துபசாரத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன் மீதான தாக்குதலுக்கு பொதுஅமைப்புக்கள் கண்டனம்!

கொழும்பு —

சர்வதேச ஊடகதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் உதயன் பத்திரிகை அலுவலகம் மீது நேற்றிரவு நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் ஊடகத்துறையினர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்.குடாநாட்டிலுள்ள வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் மற்றும் இலங்கை தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம் உள்ளிட்ட ஊடகத்துறை அமைப்புக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலரும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இருந்து சுதந்திரமான செய்திகள் வெளிவருவதை விரும்பாத சக்திகளே இந்த கோரக் கொலைகளை நிகழ்த்தியிருப்பதாக பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.



## புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை

ஈழநாதத்தின் தலைப்புச் செய்தியாக இராணுவம் - ஒட்டுக் குழுக்களின் அராஜகம் - ஜெனிவா பேச்சின் பின் 103 அப்பாவித் தமிழர்கள் படுகொலை என்று இடம் பெற்றுள்ளது.

சிங்களம் எப்போதும் எங்களோடு பேசும் மொழி 'இராணுவப் படுகொலை மொழி' என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிரூபணத்தின் ஊடாக மூன்று விடயங்களை முன்வைக்கிறோம்.

முதலாவது - மகிந்தவின் உத்தி என்ன என்பது தெளிவாகத் தெரிகிறது. போருக்கு முன்னைய சிறிய போரை அல்லது நிழல் போரைநடத்தத் தயாராகிவிட்டார். அவர் சொன்னது போல் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை அவர் இடைநிறுத்தியிருக்கிறார் என்ற அளவில் அவரது போர் உத்தி நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகவே போரை நடத்துவதற்கு முன்னர் இன்னொரு சிறிய போரை நடத்த அவர் ஆயத்தமாகிவிட்டார் என்பது தெளிவாகிறது.

இரண்டாவது - வழமைபோல் இந்தப் படுகொலைகளைப் பார்த்து உலகம் மௌனம் காத்தது எங்களை மனம் நோக வைத்தது.

சர்வதேசத்தையே கண்டனம் செய்து விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்த அறிக்கையை மிக முக்கியத்துவம் கொடுத்து சர்வதேச ஊடகங்கள் யாவும் வெளியிட்டன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

- புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வேலையை உலகம் தொடங்கிவிட்டது.

புலிகளின் மேல் தாங்கள் அழுத்தம் கொடுக்கப் போகிறோம் என்பதை மௌனம் காத்ததன் மூலமும், பேசாதிருந்ததன் மூலமும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

அதேவேளை-

சம்பூர் படுகொலைகளைத் தாங்கள் கவனிக்காமல் இல்லை என்பதற்காக அறிக்கையையும் வெளியிட்டுள்ளனர்.

தொடக்கத்தில் ஒடுக்கப்படுகிற மக்கள் மீது கருணை காட்டாமல், ஒடுக்குகிற அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுகிற இயக்கத்தை ஒரு தரப்புக்குக் கண்டனம் செய்தது. இப்போது இரு தரப்புக்கும் கண்டனம் செய்ய முனைந்துள்ளது.

ஒடுக்குகிற அணியையும், ஒடுக்கப்படுகிற அணியையும் ஒரே தட்டில், தராசில் வைத்து கண்டனம் செய்வது நம்ப முடியாத ஒரு செய்தியாக உள்ளது.

எது சரி? எது தவறு? என்பதை உலகத்தால் கணிக்க முடியாது இருப்பது கூட எங்களுக்குக் கிடைத்த வெற்றியாக நாங்கள் பார்க்கிறோம்.

ஆக, விரைவில் உலகம் ஒரு முடிவை எடுக்க வேண்டும். ஒரு தரப்பை உலகம் கண்டனம் செய்ய வேண்டும். அது எந்தத் தரப்பு என்பது காலம் சொல்லப் போகிற பதிலாக இருக்கும். அதற்காகத்தான் நாங்கள் நீண்ட மௌனத்தைக் காத்துக் கொண்டு வருகிறோம்.

இன்னொரு முக்கிய செய்தியை இந்த இராணுவ நடவடிக்கை மூலம் எங்கள் மக்களுக்கு மகிந்த சொல்லியிருக்கிறார்.

மக்களுக்கும், போராளிகளுக்கும் இடையில் எதுவித வேறுபாட்டையும் இனிக் காணப்போவதில்லை என்பதை மகிந்த விளக்கியுள்ளார்.

அதாவது மக்கள் ஒரு நிலையில் போராளிகளாக மாற வேண்டும் என்பதுதான் மகிந்தவின் செய்தி. அப்படியானால் மக்கள் எப்போது போராளியாவார்கள்? மகிந்த நினைக்கிற போது தான் நடக்கும். ஆக, மக்கள் ஒரு புதிய பரிமாணத்துக்குப் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள போராளியாக மாற வேண்டிய காலம் இது.

மக்கள் போராளிகளாக மாறி - மக்கள் படைகளைக் கட்டி - மக்கள் சேனைகளை உருவாக்கி - யுத்தம் நடத்தி வென்ற வரலாறு வியட்னாமில் நடந்திருக்கிறது.

வியட்னாமின் பழமொழி அல்லது புது மொழியாக முன்னர் நாம் குறிப்பிட்டிருந்தோம். போரிடுங்கள் பேசுங்கள், பேசுங்கள் போரிடுங்கள் என்ற மொழிக்கு ஊடாக வியட்னாமின் வரலாறு நடந்த விதமும், வெகு நுணுக்கமாகவும், இறுக்கமாகவும் இராணுவ இராஜ தந்திர அரசியல் வழி முறைகளை ஒன்றிணைத்த மூலோபாயத்தை சுமார் 10 ஆண்டுகாலம் கடைப்பிடித்தனர்.

குறிப்பாக 1965 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டுக்கு இடையில் இந்த உத்தி கலைக் கடைப்பிடித்து விடுதலை ஒரு நாளில் வருவதில்லை. ஆனால், நீண்ட நாட்களின் பின்பே வரும் என்ற செய்தியை 1973 ஆம் ஆண்டு ஒப்பந்தம் மற்றும் 1975 ஆம் ஆண்டு படையெடுப்போடு வியட்னாம் நிரூபித்தது.

10 வருடகாலமாக பேச்சும், போருமாகக் கழிந்த வரலாறு, இன்றைக்கு தமிழீழ போராட்ட வரலாற்றிலும் உருவாகிறது.

இனிமேல் பேச்சோடு போருமாக, போரோடு பேச்சுமாக நடக்கப் போகிறது

# ஒரு கையில் தொழிற் கருவியும்; மறுகையில் ஆயுதமும் ஏந்துங்கள்

என்பதை நாங்கள் முன்கூட்டியே அறிவிக்கிறோம்.

இறுதியில் வியட்னாம் இராணுவ வழிமூலம் தனது வெற்றியைப் பெற்றுக் கொண்டது என்பதையும் நாம் இங்கே மனதில் கொள்ள வேண்டும்.

போரின் காரணமாக மிக உச்சக்கட்டமான இழப்பைச் சந்தித்த நாடு வியட்னாம். உதாரணமாக 1965 ஆம் ஆண்டுக்கும், 1973 ஆம் ஆண்டுக்கும் இடையில் 14 மில்லியன் தொன் பீரங்கிக் குண்டுகள், வான் வழிக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டாம் உலகப் போரில் பாவித்ததை விட 3 மடங்கு அதிகமாகும்.

இதேபோல, அண்மையில் எங்கள் சம்பூரில் ஒரு குறிப்பிட்ட தொகையான தொன் வெடிபொருட்கள் எங்கள் மக்கள் மீது கொட்டப்பட்டுள்ளன.

வியட்னாமிய மக்களின் மரபு ஒன்றை நாம் நினைவில் கொள்வோம்.

வியட்னாமிய வரலாற்றில் அந்த மக்கள் மூன்று விடயங்கள்ள முக்கியமாகக் கொள்கிறார்கள்.

வீடு, நிலம் மற்றும் இறந்தவர்களது நினைவிடங்கள் ஆகியவற்றில் எதிரியானவன் எந்த வகையிலும் உள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்பதே அவர்களது திடமான முடிவு.

'வீட்டில் வாழும் போது உயிரோடு வாழ வேண்டும். உயிரற்ற நிலையில் நினைவிடங்களில் வாழ வேண்டும்' என்பதை புனிதமாகக் கொண்டு இவற்றில் ஒரு வகையிலும் ஆக்கிரமிப்பாளன் கால் வைக்க விடக் கூடாது என்ற அடிப்படையில் வியட்னாமிய மக்களின் போர் மரபு உருவானது.

அதே வகையில் உலக மக்களின் அனுபவங்களிலிருந்தும் தனக்கு வேண்டியதை வியட்னாம் கற்றுக் கொண்டுள்ளது.

ஜெனரல் ஜியாப் என்பவர் வியட்னாமின் முக்கிய தளபதி. மக்கள் சேனைகளைக் கட்டிய அனுபவம் உள்ளவர். அவரது நூல் ஒன்றின் கருத்துக்களை முன்வைக்கிறோம்.

புரட்சிகர மக்களை ஆயுதபாணிகளாக் குதலும், மக்கள் படையும் என்று 1960 ஆம் ஆண்டுகளில் மார்க்ஷிய சிந்தனைகளின் அடிப்படையில் - வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டவைகளில் எங்களுக்குப் பொருத்தமானவற்றை தெரிவு செய்து எங்கள் மக்கள் மனதில் கொள்வதற்காக சிலவற்றை தருகிறோம்.

'ஆயுதமேந்திய எழுச்சியிலும், புரட்சிகரப் போரிலும் அதேபோல் மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும் தேசிய பாதுகாப்பிலும், தேசிய விடுதலைப் போரிலும் அதுபோல் தாய் நாட்டைப் பாதுகாக்கும் போரிலும் வலிமை மிக்க ஒரு மக்கள் சேனையைக் கட்டும்போதே பரந்துபட்ட மக்கள் திரளையும் ஆயுதபாணிகளாக்க வேண்டும். மக்களின் ஆயுதப்படைகளை மக்கள் சேனைகளின் அத்திவாரமாகக் கருத வேண்டும். மக்கள் சேனையை மக்கள் படையின் கூறாகக் கருத வேண்டும்' என்றார்.

இங்கே அவர் மக்கள் சேனை என்பதை நிரந்தர இராணுவத்தையும், மக்களின் ஆயுதப் படை என்பதை மக்கள் பங்குபற்றக் கூடியதையும் கருத்தில் கொண்டு தெரிவித்துள்ளார்.

இத்தகைய முடிவுகளை எடுத்து வியட்னாமின் வரலாறு மாற்றியமைக் கப்பட்டது.

வியட்னாமின் மக்கள் சேனை எவ்வாறு உருவாக்கப்பட்டது? என்பதை சொல்லுகிறோம்.

வியட்னாமின் மக்கள் படை என்பது - தற்காப்புப் படைகளும், குடிப்படைகளும், கெரில்லா படைகளுமாக வளர்ச்சியடைந்து இறுதியில் மக்களின் ஆயுதப் படைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

முதலாவது பிரதான படை என்று சொல்லக் கூடிய நிரந்தரப் படை.

இரண்டாவது பிரதேசப் படை என்பது பிரதேசங்களை காப்பதற்கான படை.

மூன்றாவது குடிப்படை என்று சொல்லக்கூடிய, மக்கள் அனைவரும் பங்குபற்றக் கூடிய ஒரு படையணியாக உருவாக்கப்பட்டது.

இதில் இராணுவ ரீதியாக நிரந்தரப் படை அணி என்பது மிக முக்கியமானது. நாடு முழுவதும் முக்கிய போர் முனைகளில் பயன்படுத்தப்பட்ட இயங்கும் படை இதுதான். எதிரியின் சேனையை குறிப்பாக இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இயங்கு படையை நிர்மூலமாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை இந்தப் படை மேற்கொண்டது.

ஒவ்வொரு போர் முனைகளிலிருந்தும் ஒவ்வொரு திட்டவட்டமான நிலைமைகள் - கடமைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப பிரதேச படைகள் கட்டப்பட்டன.

இதை ஜியாப் வார்த்தையில் கூறினால், பிரதேசங்களில் நடத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் அடிப்படையாகவே அவை அமைகின்றன. வலுவான படை அலகுகளாக ஒழுங்கமைக்கப்பட்ட பிரதேச படைகள்- போர் நடவடிக்கைகளில் தமது படைகளைத் தேவைக்கு ஏற்ப, தேவையான இடங்களில் ஒன்று குவித்தும், பரவலாக்கியும் என்று அந்த வரிகள் செல்கின்றன.



குடிப்படைகள் என்று சொல்லப்படுகிற மக்களினது ஆயுதப் படைகள் குறித்தும் மிக விரிவாக ஜியாப் கூறியுள்ளார்.

இன்று எங்கள் நிலைமையில் போராளிகளாக மக்கள் மாற வேண்டுமாயின், மக்களை ஆயுதமாக்குதல் - சேனைகளில் இணைத்தல் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டிய காலகட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் வியட்னாமின் அனுபவங்கள் எங்களுக்குப் பயன்படும்.

தமிழீழ மக்கள் - வியட்னாமிய மக்களினது சாதனைகளைப் பற்றி அறிவது முக்கியமானது.

அந்த வகையிலும் ஜியாப்பின் கருத்துக்களை தொடர்ந்தும் வாசிக்கிறேன்.

போரில் குடிப்படைகளும், தற்காப்புப் படைகளும் ஒரு பெரும் பாத்திரத்தை வகித்தன.

இந்த தற்காப்புப் படைகளும், குடிப்படைகளும்தான் தற்போது நாங்கள் அமைக்க விரும்புகிற மக்கள் படையணியின் வியட்னாம் மரபாக இருக்கிறது.

'கலப்பை ஒரு கையிலும் ரைபிள் ஒரு கையிலும்
சுத்தியல் ஒரு கையிலும் துப்பாக்கி ஒர கையிலும்'

என்ற இயக்கங்களில் இளைஞர்களும், முதியவர்களும், ஆடவரும், பெண்டிரும், கிராமங்களிலும், நகரங்களிலும், சமவெளிப் பகுதிகளிலும், மலைகளிலும், எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்துவதிலும், செயல்நுட்பத்துடன் பங்குபற்றினர். அவர்கள் தாழ்வாகப் பறக்கும் விமானங்களை சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகளை கிராமப்புறங்களில் ஆங்காங்கே ஒன்றுக்கொன்று தொடர்புள்ள வலைப் பின்னலைப்போல அமைத்தனர்.

குடிமக்களையும், உற்பத்தியையும் பாதுகாத்து, எல்லா உயரங்களிலும், எல்லா திசைகளிலும் பறக்கின்ற எதிரியின் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் துப்பாக்கிகள் அடங்கிய பின்னலமைப்பை உருவாக்குவதில் விமான எதிர்ப்புப் படையுடனும், விமானப் படையுடனும் நெருக்கமாக ஒத்துழைத்தனர்.

இவ்வாறாக விரிந்து செல்லும் வசனங்களுக்கூடாக இங்கே நாம் அறிய வேண்டியது -

தற்போது இரண்டு கைகள் உள்ள எங்கள் மக்கள் - ஒரு கையில் தொழிலுக்கான கருவிகளையும், மறு கையில் ஆயுதத்தையும் ஏந்த வேண்டிய காலம் வந்துவிட்டது.

வியட்னாம் மக்களினது சாதனைகளை வாசித்தால், இன்றைக்கு நம்ப முடியாததாக இருக்கக்கூடும். இருந்தபோதும் சமாதான காலத்துக்கூடாக உருவாக்கப்பட்ட படை - அரசியல் படை என்று சொல்லப்பட்டது.

அந்த அரசியல் படையை சமாதான காலத்திலிருந்து போர்க் காலத்துக்குத் தள்ளப்பட்ட போது - எங்கள் தமிழீழம் போல் தற்காப்பு படை நிலையிலிருந்து போரிடும் படையாக மாற்றிய வளர்ச்சியையும் நாங்கள் பார்க்கிறோம்.

தமிழீழத்தில் நீண்டகாலமாக போர் மரபு இருந்தது. இடையில் மறுக்கப்பட்டுவிட்டது. ஆனால், வியட்னாமில் பல நூற்றாண்டு காலமாக சீனாவுக்கு எதிராக - ஜப்பானுக்கு எதிராக - பிரான்ஸுக்கு எதிராக - அமெரிக்காவுக்கு எதிராக என்று போர்ப் படையணி மரபு இங்கு இல்லாவிட்டாலும் கூட வியட்னாமிய அனுபவங்களை இங்கே நாம் பயன்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

நாங்கள் வியட்னாம் அனுபவத்துக்கூடாக - விடுதலை வலயங்கள் அல்லது புரட்சிகரத் தளங்கள் அமைக்கப்பட்டது போல இன்று தமிழீழத்தில் வன்னி என்பது விடுதலை வலயமாக - புரட்சித் தளமாக - மையமாக இருப்பதால் எங்கள் மக்கள் இந்தக் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். ஜியாப் சொன்னது போல அவர் புரட்சி என்கிறார்... நாம் விடுதலை என்று சொல்லலாம்.

'விடுதலையின் அனைத்துக் கடமைகளிலும் மக்களே அதற்குத் திடமான அடிப்படையாக அமைகிறார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மக்களின் அரசியல் படைகளே ஆயுதப் படைகளின் திடமான தளமாகும். மக்களின் ஆயுதப் படைகளே புரட்சி சேனையின் திடமான அடிப்படைத் தளமாகும்' என்ற செய்திக்கூடாக நாம் இங்கே ஒரு கட்டுமானத்தைக் கட்ட வேண்டியது அவசியமாகிறது.

ஏற்கனவே எங்கள் விடுதலை அணியில் நிரந்தரப் படையணியும், அதற்குத் துணையான அணியும் கட்டப்பட்டுள்ளது.

இப்போது மூன்றாம் படையணி ஒன்றை அற்புதமாக - நேர்த்தியாக கட்ட வேண்டிய நிலையில் உள்ளோம்.

அந்த வகையில் மக்களை போர் உத்திகளுக்கூடாக போரணியாக்கி, போர் உத்திகளை மக்களுக்கும் கற்க வைத்து, ஒரு மகத்தான அரசியல் படையையும், வலிமை மிக்க ஆயுதப் படைகளையும் ஒன்றிணைக்க வேண்டிய கால கட்டத்தில் நாங்கள் வாழ்கிறோம்.

இதைத்தான் மகிந்தவின் இராணுவ உத்திகளும், குண்டு வீச்சுகளும், சர்வதேச அழுத்தங்களும் உருவாக்கி உள்ளன.

தொடர்ந்து வரக்கூடிய இந்த மிகப்பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிற மிகப் பெரிய கவசமாக - அற்புதமான ஒரு படையாற்றலாக - மக்கள் படையணியை எங்கள் தேசத்துக்கேற்ற வகையில் உருவாக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆயத்தம் ஆக வேண்டும்.

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை




✻ இல.01 முதல் 10 வரையுள்ள வினாக்களில் கீழே சில எண்களும், எழுத்துக் களும் கோலம் ஒன்றுக்கு அமைய எழுதப்பட்டுள்ளன. அந்தக் கோலத்தைப் புரிந்துகொண்டு இடைவெளிக்குப் பொருத்தமான எண்களை, எழுத்துக் களை எழுதுக.

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | A | 6 | 8 | B | | | C | 14 | | | 18 | 20 | E | | 24 | | | 30 |

1. இங்குள்ள நான்காவது வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்து யாது? ..............................
2. இங்குள்ள முதலாம், இரண்டாம் வெற்றிடத்தில் வரும் எண் யாது? ..............................
3. இங்குள்ள ஆறாவது வெற்றிடத்தில் வருவது எண்ணா? அல்லது எழுத்தா என எழுதுக? ..............................
4. இங்குள்ள எண்கள் ஒற்றை எண்ணா அல்லது இரட்டை எண்ணா? ..............................
5. இங்குள்ள எண்களின் கூட்டுத் தொகை யாது? ..............................
6. அட்டவணையிலுள்ள இரு எண்களைப் பெருக்கினால் வரும் விடை 48 எனின் அந்த இரு எண்களும் யாது? ..............................
7. இங்குள்ள ஆங்கில எழுத்து நான்கைச் சேர்த்து எழுதினால் ஒரு சொல் வரும் அதை எழுதுக? ..............................
8. வெற்றிடத்தில் வரும் ஆங்கில எழுத்துக்களை எழுதுக? ..............................
9. வெற்றிடத்தில் வரும் எண்களை எழுதுக? ..............................
10. அட்டவணையில் உள்ள முதலாவது எண்ணால் கடைசி எண்ணைப் பிரித்தால் வரும் விடை யாது? ..............................

✻ இல.11 முதல் 20 வரையுள்ள வினாக்களில் மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க.


11. வைத்தியசாலையில் அதிகம் இருப்பவர்கள்.
    1. உல்லாசப் பயணிகள் 2. தாதி 3. வைத்தியர் 4. நோயாளிகள்
12. வேரில் உணவு சேமிப்பைக் கொண்ட தாவரம்.
    1. மரவள்ளி 2. கீரை 3. பப்பாசி 4. வாழை
13. காலத்தின் அளவை அளக்க உதவும் கருவி.
    1. தராசு 2. அளவுநாடா 3. கடிகாரம் 4. கிலோகிராம்
14. வைத்தியசாலையுடன் நெருங்கிய தொடர்புடைய வண்டி எது?
    1. புகையிரதம் 2. துவிச்சக்கரவண்டி 3. கார் 4. அம்புலன்ஸ்
15. பாடசாலையுடன் தொடர்புடைய பதவி எது?
    1. பெற்றோர் 2. விளையாட்டு வீரர் 3. அதிபர் 4. மாணவர்
16. மாப்பொருள் முதலில் சமிபாடடையத் தொடங்குமிடம்
    1. களம் 2. இரைப்பை 3. தொண்டை 4. வாய்க்குழி
17. தேசிய அடையாள அட்டையை வழங்கும் திணைக்களம்.
    1. தபால் திணைக்களம் 2. ஆட்பதிவுத் திணைக்களம் 3. பரீட்சைத் திணைக்களம் 4. சுகாதாரத் திணைக்களம்
18. பாலூட்டிப் பறவைகளில் ஒன்று.
    1. தீக்கோழி 2. ஆந்தை 3. வெளவால் 4. ஆட்காட்டிக் குருவி
19. விளிம்புகள் உள்ளதும் உச்சிகள் இல்லாத பொருள் ஒன்று.
    1. சதுரமுகி 2. கூம்பு 3. உருளை 4. கோளம்
20. பல்லியின் முட்டை நிறம் யாது?
    1. மஞ்சள் 2. கபிலம் 3. வெள்ளை 4. கறுப்பு

**பின்வரும் வினாக்களை சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

21. தூக்கணாங்குருவிக்குக் கூடுகட்டத் தெரியாது. (..........)
22. கியுலெக்ஸ் என்னும் நுளம்பு மலேரியா நோயைப் பரப்புகின்றது. (..........)
23. இலங்கையை தப்பிரபேன் என அழைப்பார்கள் (..........)
24. வீதிகளில் சமிக்ஞை விளக்குகள் சிவப்பு நிறம் காட்டும் போது வாகனங்கள் செல்லலாம். (..........)
25. உணவுப் பொருட்களை அதிக நேரம் அவிப்பதால் போசனைத் தன்மை இழக்கப்படமாட்டாது. (..........)


26. 

பின்வரும் படத்தில் ஆக்கக்கூடிய அதிக முக்கோணிகள் எத்தனை. ..............................

27. 

A B C

மேலே உள்ள படத்தில் நிழற்றப்பட்ட பகுதியை A+B யில் வரும் விடையை C படத்தில்நிழற்றிக்காட்டுக.

28. 


A B C

A+B என்னும் எண்சட்டத்தைக் கூட்டி வரும் விடையை C எண்சட்டத்தில் காட்டுக.

29. பின்வருவனவற்றில் இயற்கை அனர்த்தங்களில் அடங்காதது எது?
    1. புயற்காற்று 2. மண்சரிவு 3. குண்டுவெடிப்பு
30. எமது நாடு யாரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது?
    1. போத்துக்கேயர் 2. ஒல்லாந்தர் 3. ஆங்கிலேயர்
31. இலங்கையில் பறங்கியர் எனும் இனம் தோன்றியமைக்குக் காரணமானவர்கள் என்று கூறப்படுபவர்கள் யார்?
    1. ஆசிரியர் 2. ஒல்லாந்தர் 3. வேடுவர்
32. இலங்கையில் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவரும் இலங்கையின் முதல் பிரதமரும் யார்?
    1. சேர். ஜேம்ஸ் பீரிஸ் 2. டி.எஸ். சேனநாயக்க 3. பண்டாரநாயக்க

✻ கீழே சில நிகழ்வுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிகழ்வுகளின் அருகி லும் சில கூற்றுக்கள் காணப்படுகின்றன. அவற்றில் அந்த நிகழ்வைச் சரியா கக் கூறும் கூற்றைத் தெரிவுசெய்து இலக்கத்தை விடைக்குரிய கூட்டினுள் எழுதுக.

33. 

1. வலது கையால் தலையை இடது பக்கத்துக்கி அழுத்துகின்றார்.
2. இடது கையால் தலையை இடது பக்கத்துக்கு அழுத்துகின்றார்.
3. இடது கையால் தலையை வலது பக்கத்துக்கு அழுத்துகின்றார்.

(..........................................)

34. 

1. வலது காலும், வலது கையும் பின்னோக்கு உள்ளன.
2. இடது காலும், வலது கையும் முன்னோக்கி உள்ளன.
3. வலது கையும், இடது காலும் பின்னோக்கி உள்ளன.

(..........................................)


35. 

1. இது கால் பகுதிக்காக ஒரு அப்பியாசப் பயிற்சியாகும்.
2. இது இடுப்புப் பகுதிக்கான ஒரு அப்பியாசப் பயிற்சியாகும்.
3. இது தலைப் பகுதிக்கான ஒரு அப்பியாசப் பயிற்சியாகும்.

(..........................................)

✻ இல. 36 முதல் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலாவது படம் அடுத்துத் தரப்பட்டுள்ள நான்கு படங்களுள் ஒன்றின் வேறொரு திசையி லிருந்து பார்க்கும் பொழுது காணப்படும் தோற்றத்தைக் குறித்து நிற்கிறது. முதற் படம் குறித்து நிற்கும் சரியான படத்தைத் தெரிந்து அதன் கீழ்கோடிடுக.

36. 

37. 

38. 

39. 

40. 

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

## பகுதி - II

**✶பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

சேவற்கோழியுண்டு. காகமுண்டு. வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு.
மேவும் பொன்னே அதிகாலை தெரிந்திட
வேறுங் கடிகாரம் வேண்டுமோடி

செங்கதிர் பொங்கி வருவதுண்டு. நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு.
மங்கையே காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி

தன்னிழல் தன்னடியாவதுண்டு. சுடர்
தானும் தலைநேர் எழுவதுண்டு.
இன்னமுதே பகல் உச்சி ஈதென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி.

1. இந்தப் பாடல் எதைப்பற்றி வர்ணித்துப் பாடப்பட்டது?
........................................................
2. அதிகாலையைத் தெரிந்து கொள்ள முடியுமான இரு இயற்கை வழிகளைக் குறிப்பிடுக.
1. ................................ 2. ........................................
3. பகல் உச்சியைத் தெரிந்து கொள்ளும் வழி யாது?
........................................................
4. பகல் உச்சிப்பொழுது என்ன நேரமாக இருக்கும்?
........................................................
5. இரண்டாவது பாடலில் சூரியனை எவ்வாறு வர்ணித்துக் கவிஞர் கூறுகிறார்?
........................................................
6. கடிகாரம் தேவையில்லை என இக்கவிஞர் எவ்வாறு கூறுகிறார்?
........................................................
7. உச்சி பொழுதில் நிழல் ஒருவருக்கு எப்படியிருக்கும்?
........................................................
8. மலர்கள் எப்பொழுது மலர்கின்றன?
........................................................
9. செக்கச் சிவந்து காணப்படுவது எது?
........................................................
10. இந்தப்பாடலில் பெண்ணை எவ்வாறு வர்ணித்துக் கூறுகின்றார்?
........................................................

**✶பின்வரும் சொற்களை சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்களத்திலும் எழுதுக.**

11. கடிகாரம்:.......................... 13. புத்தகம்:..........................
12. மலர்:.......................... 14. உப அதிபர்:..........................

**✶பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

15. எழுவதுண்டு:..........................+..........................
16. பகலுச்சி:..........................+..........................
17. இன்னமுதே:..........................+..........................

**✶நந்தினி அவளின் வீட்டுத் தேவைக்காக பொருட்கள் வாங்கினாள். அந்தப் பொருட்களின் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.**

| பொருட்கள் | பொருட்களின் விலை |
|---|---|
| 1/2 Kg தேயிலை | ரூபா 40.00 |
| 1 Kg மா | ரூபா 30.00 |
| 3 அப்பியாசக்கொப்பி | ரூபா 66.00 |
| 500 மில்லிலீற்றர் எண்ணெய் | ரூபா 45.00 |
| 1 மீற்றர் துணி | ரூபா 95.00 |
| 4 மாம்பழம் | ரூபா 60.00 |

18. 100g தேயிலையின் விலை யாது?..........................
19. 500g மாவின் விலை யாது?..........................
20. 2 அப்பியாசக் கொப்பியின் விலை யாது?..........................
21. 4 மீற்றர் துணி வாங்குவதற்கு எவ்வளவு காசு தேவை?..........................
22. நந்தினி விலைப்பட்டியலின்படி கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?..........................
23. 1Kg மாவும் 1 Kg தேயிலையும் வாங்கினால் எவ்வளவு பணம் தேவை?..........................
24. 1 டசின் அப்பியாசக் கொப்பிகளின் விலை யாது?..........................
25. 4 மாம்பழம் ரூபா 60.00 எனின் 10 மாம்பழங்களின் விலை யாது?..........................
26. 1 l எண்ணெய் விலை யாது?..........................
27. 1 Kg தேயிலையும் 1 லீற்றர் எண்ணெயும் வாங்க எவ்வளவு பணம் தேவை?..........................

**✶நெல், மா, புளி, வேம்பு, புல், தென்னை, கமுகு, செவ்வரத்தை, பூவரசு, கரும்பு என்னும் தாவரங்களை ஆணிவேர் உள்ள தாவரங்கள், நாருருவேர் உள்ள தாவரங்கள் என வகைப்படுத்தி பின்வரும் அட்டவணையில் எழுதுக.**

| 28. ஆணிவேர் | 29. நாருருவேர் |
|---|---|
| 1. .......................... | .......................... |
| 2. .......................... | .......................... |
| 3. .......................... | .......................... |
| 4. .......................... | .......................... |
| 5. .......................... | .......................... |

**✶அருகே உள்ள படத்தினை நன்றாக அவதானித்து கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

30.




கீழே காணப்படும் இலக்கங்கள் எந்தவகை கைத்தொழில்கள் என எழுதுக.
i (8) ..........................
ii (4) ..........................
iii (5) ..........................
iv (1) ..........................

31.
i. துருவல் கருவியைக் குறிக்கும் இலக்கம் யாது?
..........................
ii. இலத்திரனியல் பொருள் ஒன்றின் இலக்கம் எது?
..........................

32. புள்ளடி (×) இடப்பட்டுள்ள பொருள், இன்று சூழலையும், மண்ணையும் மாசு படுத்தும் ஓர் உற்பத்தித் துறையினுள் அடங்கும் பொருளாகும். அவ்வுற்பத்தித் துறை யாது?
........................................................
33. இலக்கம்(3) ஒருவகை உலோகப் பொருள் உற்பத்தியாகும். அந்த உலோகப் பொருள் யாது?
........................................................
34. தோல் உற்பத்தியுடன் தொடர்புடைய பொருள் ஒன்று காணப்படுகின்றது. அதன் இலக்கம் யாது?
........................................................
35. தெங்குப் பொருள் கைத்தொழிலுடன் தொடர்புடைய பொருட்கள் இரண்டின் இலக்கங்களை எழுதுக.
........................................................

**✶பின்வரும் சுருக்க எழுத்துக்களின் விரிவாக்கத்தைச் சொற்களில் எழுதுக.**

36. அ.ப:.......................... 37. ம.ப.பா:..........................
38. தொ.பே.இ:.......................... 39. இ.மி.ச:..........................
40. ப.நோ.கூ.ச:..........................

**பின்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

41. புத்தபெருமானின் புனித தந்தம் பேணப்படும் இடம் யாது?
1. அபயகிரி 2. தலதா மாளிகை 3. கதிர்காமம்
42. மன்னர் காலத்து இராசதானியாகப் பெயர் பெற்ற வணக்கத்தலம் எது?
1.யாப்பகூவ 2. சிகிரியா 3. மிகிந்தலை
43. பௌத்த மத வணக்க ஸ்தலங்களைத் தன்னகத்தே அதிகமாகக் கொண்ட மாவட்டம் எது?
1. பொலனறுவ 2. அநுராதபுரம் 3. கண்டி
44. எமது நாட்டின் ஆதிக்குடிமக்கள் எனக் கூறப்படுவோர்கள் யார்?
1. சிங்களவர் 2. விவசாயிகள் 3. வேடர்கள்
45. புத்தபெருமான் சிறிது நிலம் கேட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் நடத்தியதன் பிரதிபலிப்பாக உள்ள இன்றைய நிகழ்வு யாது?
1. பொசன் 2. பெரகரா 3. வெசாக்
46. குடிசைக் கைத்தொழிலுக்கு உதாரணமாகக் கூறக்கூடிய உற்பத்தி நடவடிக்கை எது?
1. கயிறு திரித்தல் 2. பிளாஸ்டிக் உற்பத்தி 3.சிமெந்து உற்பத்தி

தடிமன், வாந்திபேதி, மாலைக்கண், குருதிச்சோகை, கண்டக்கழலை

**✶மேலே உள்ளவை சில நோய்களாகும். இந்த நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் சில கீழே தரப்படுகின்றன. எந்தக் காரணத்துக்கு எந்த நோய் பொருந்துமோ, அவற்றுக்கு கீழே உள்ள புள்ளிக் கோட்டில் அந்த நோயின் பெயரை எழுதுக.**

47. விற்றமின் A குறைபாடு :..........................
48. இரும்புச் சத்து குறைபாடு :..........................
49. வைரஸ் தொற்றுதல் :..........................
50. அயடின் குறைபாடு :..........................
51. பற்றீரியா தொற்றுதல் :..........................

**✶பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப் பதங்களையும், தமிழ்ப் பதங்களுக்குரிய ஆங்கிலப் பதங்களையும் எழுதுக.**

52. CRICKET :.............. 53. STUDENT:..............
54. TOMORROW :.............. 55. HOLIDAY:..............
56. காடு :.............. 57. ஆசிரியர் :..............
58. மணித்தியாலம் :.............. 59. மரக்கறி :..............




A என்னும் மெழுகுதிரி நன்றாக எரிகின்றது.
B என்னும் மெழுகுதிரி ஓரளவு எரிகின்றது.
C என்னும் மெழுகுதிரி அணைந்து விட்டது.
இத்தகவலின்படி

60. இந்தப் பரிசோதனையின் நோக்கம் யாது?
........................................................
61. இந்தப் பரிசோதனை செய்வதற்கு நாம் தேடிக் கொள்ள வேண்டிய பொருட்கள் எவை?
........................................................
62. எரிவதற்குத் தேவையான வளி எது?
........................................................


*விடைகள் - அடுத்தவாரம்.*

*ஆசிரியர்* - T.அம்பிகைபாகன் ஆசிரிய ஆலோசகர்
மேல்மாகாண கல்வித் திணைக்களம். B Ed Spl Trd Tamil.

## சென்றவார விடைகள்........

### வினாத்தாள் I

(1) 3 (2) 2 (3) 2 (4) 2 (5) 3 (6) 1 (7) 3 (8) 4
(9) 4 (10) 3 (11) 2 (12) 1 (13) 3 (14) 3
(15) வண்ணவண்ண/சின்னச் சின்ன (16) 2 (17) 1 (18) பலகாரம்
(19) தலைநகரம் (20) 1 (21) சஜித்குமார் (22) தாத்தா
(23) 10750 (24) ரூபா 15.00 (25) பிழை (26) பிழை
(27)



(28)

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 2 | 5 | 6 | (29) |
| 7 | 8 | 4 | 8 | |
| 4 | 2 | 5 | 9 | |
| 4 | 9 | 9 | 9 | (30) |
| 3 | 9 | 8 | 3 | |

(31) 3 (32) 4 (33) 1 (34) 36 (35) 20 (36) 16
(37) 28,36 (38) 440,550 (39) நீரோற்பலம் (40) வெள்ளி விழா

### வினாத்தாள் II

I. (1) ஆறு/நதி (2) குன்று/சிகரம் (3) ஆரம்பித்தான்/ காட்சியளிக்கின்றன/ ஆக்குகின்றான்/இளைப்பாறுவாள் (4) உயர்ந்த/சுழலான/பயணஞ்/ குறிப்பிட முடியாத (5) ஆரம்பிக்கிறான்/ஆரம்பிக்கின்றான் (6) மலையுச்சிகளில் (7) சூடு (8) நான் (9) பயணம் + செய்யும் (10) தோட்டந்துரவு
II. (1) Food (2) Mountain (3) Cat (4) Large III. (1) இரவு வந்தனம்/இரவு வணக்கம் (2) தண்ணீர்/நீர் (3) மதியபோசனம் (4) அதிபர்
IV. (1) 3 (2) 2 (3) 4 (4) 2 (5) 1 (6) 3 (7) 3 (8) 2 (9) 1 (10) 3
V. (1) றம்புட்டான் (2) திராட்சை (3) அப்பிள் (4) மாம்பழம் (5) கொய்யாப்பழம்
VI. (1) வேட்பாளர் (2) வாதி (3) முன்னுரை (VII) (1) உயரம் பாய்தல் (2) தடிஊன்றிப் பாய்தல் (VIII) (1) பிழை (2) சரி (3) சரி (4) பிழை (5) பிழை (6) சரி (7) பிழை (ix) (1) கயிறு (2) கயிறு, மரக்கட்டை (X) (1) முகத்தில் தெரியும் (2)பழகப்பம் (xi) (1) அனுப்புதல்:- திரு.மயூரன் கண்ணன், 04, இரத்தினபுரிவீதி, கண்டி சேரல்:- திரு.முஹமட் மன்சூர், 219, காலி வீதி, கொழும்பு - 06 (2) ரூபா 20.00 (3) ரூபா 5.00 (4) ரூபா 3.00 XII. (1) 2 (2) 5 (3) 1 (4) 4 (5) 3 XIII. (1) கனவுரு (2) 12 (3) 08 (4) 06 (5)தீப்பட்டி/செங்கல் XIV. 4/6, 2/3

# எதிர்கால சந்ததியின் வாழ்வுக்காக நிலக்கீழ் நீரை பாதுகாக்க வேண்டும்

## மாகாண கால்நடை அபிவிருத்தி உதவிச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

குடாநாட்டில் அருகிவரும் நிலத்தடி நீர்வளத்தை, எதிர்கால சந்ததியின் வாழ்வை கருத்திற்கொண்டு விவசாயிகள், பொதுமக்கள் வீண்விரயம் செய்யாமல், நவீன முறைகளைக் கையாண்டு பயன்படுத்த முன்வர வேண்டுமென வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன கடற்தொழில் அமைச்சின் உதவிச் செயலாளர் பொ. தயானந்தன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடத்திய விவசாய பொருட்காட்சியும், நடமாடும் சேவையும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். மாவட்டம் பல்வேறு விதமான பயிர்ச் செய்கையிலும் தலைநிமிர்ந்து நிற்பதற்கு காரணம் இயற்கை அன்னை வழங்கிய நிலக்கீழ் நீர் வளத்தால் தான். இந்த நீர்வளம் மாசடைவதால் பல்வேறு விதமான தீமைகள் ஏற்படலாம்.

எனவே, இயற்கையாக எமக்கு கிடைத்த வளங்களை நாம் எதிர்கால சந்ததிக்கும் சேமித்து வைக்க வேண்டும்.

மக்கள் தமது பிரச்சனைக்கு அலுவலகங்களைத் தேடிச் செல்லும் நிலைமாறி மக்களின் இருப்பிடங்களுக்கு அருகில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் நடமாடும் சேவைகள் மூலம் ஏற்பட்டுள்ளன.

எனவே, மக்கள் நடமாடும் சேவைகளை உரிய முறையில் பயன்படுத்தி தமது பிரச்சனைகளை உரியமுறையில் தீர்க்கவேண்டுமென அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மேலதிக அரச அதிபர் சிவசுவாமி - யாழ். குடாநாட்டு விவசாயிகள் மரபு ரீதியான செயற்பாடுகளைக் கைவிட்டு விழிப்பணர்வோடு நவீன முறைமைகளைக் கையாண்டு, தமது விவசாய முயற்சிகளை பெருக்குவதுடன் இயற்கைச் சூழலையும் பாதுகாக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.


## அதிபர்களுக்கான கூட்டம் நாளை!

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலத்தில் நடைபெறும் என கோட்ட அதிகாரி கைலாசநாதர் தெரிவித்தார்.

(72)





யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இந்துமா மன்றம் நடத்திய தவத்திரு சிவயோக சுவாமிகளது குருபூசை தினத்தன்று சைவப் புலவர் கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றும் போது இந்து மா மன்றப் பொறுப்பாசிரியர் ந.ஸ்ரீராமகுமார் மாலை அணிவித்து கௌரவிப்பதையும், சைவப்புலவர் கா.கமலநாதனிடமிருந்து மாணவர் ஒருவர் சான்றிதழ் பெறுவதையும் படங்களில் காணலாம். (82)

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே சித்திரப் போட்டி!

யாழ்ப்பாணம் —

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக பென்டல் நிறுவனம் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் சித்திரப் போட்டியொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தச் சித்திரப் போட்டியில் பாடசாலையில் தரம் 1-13 வரை கல்வி கற்கின்ற மாணவர்கள் பங்குபற்ற முடியும்.

தரம் 1,2 மாணவர்கள் மனதைத் தொட்ட சூழல், பெரியோரைக் கனம் பண்ணல், பூந்தோட்டம், தரம் 3,4,5 மாணவர்கள் அநாதைகளுக்கு உதவுவோம், விளையாட்டுப் போட்டி, சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம் தரம் 6,7,8,9 மாணவர்கள் வீட்டுத்தோட்டம் எமக்கு உதவும் தலதா பெரஹர, கிறிஸ்தவ விழா, வேல்விழா நகரம், தென்னந்தோட்டம் தரம் 10,11,12,13 மாணவர்கள் தொழிலாளர் நாட்டின் உயிர்நாடி, நீராடும் கலாசாரத்தைப் பாதுகாத்தல் போன்ற தலைப்புகளில் படங்களை வரைந்து ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டுமென உரிய பாடசாலைகளுக்கு சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# வீடுகள் கையளிப்பு!

சுழிபுரம் —

சுழிபுரம் காட்டுப்புல கிராம அபிவிருத்திச் சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது மீளக் குடியமர்ந்து வரும் குடும்பங்களுக்குத் தென்னிந்திய திருச்சபை புதிய வீடுகளை அமைத்து வருகின்றது.

இதன்படி முதற்கட்டமாக, கட்டி முடிக்கப்பட்ட 20 வீடுகள் பயனாளிகளிடம் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன. வண.எஸ்.யோசுவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் நிவாரணப் பணிக்குழுத் தலைவர் சிரானி மில்ஸ், திட்ட உத்தியோகத்தர் வோட்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், ஒவ்வொரு வீட்டுப் பயனாளிகளுக்கும் இருபதாயிரம் ரூபா பெறுமதியுடைய பசுமாடுகளும் வழங்கப்பட்டன.

# வீதியில் வெட்டப்படும் மரங்களை அகற்ற கோரும் படையினர்!

யாழ்ப்பாணம் —

பலாலிவீதி கோண்டாவில் சந்தியில் உள்ள நிழல் மரங்களை வெட்டும் படையினர் அவற்றை அகற்றுமாறு போக்குவரத்தில் ஈடுபட்ட மக்களை வற்புறுத்தி வருவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

கோண்டாவில் சந்தியில் நேற்று முன்தினம் மாலைவேளை வீதியில் இருமருங்கிலும் நின்ற நிழல் தரு மரங்களை வெட்டிய படையினர், அதன் கிளையை நடு வீதியில் விட்டு விட்டு அவற்றை அகற்றுமாறு வீதியால் சென்ற மக்களை வழிமறித்துப் படையினர் வற்புறுத்தி அகற்றியுள்ளனர்.

மாலை வேளையில் படையினர் மக்களை வழிமறித்து இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் அந்த வீதியூடாக உயர்பாதுகாப்பு வலயப்பிரதேசத்துக்குச் செல்லும் அதிகளவானோர் வேறு பல இடங்களிலும் படையினர் சோதனை மேற்கொண்ட பின்னரே தொடர்ந்து பயணிக்க அனுமதித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மிதிவெடி அகற்றும் பணிகளுக்கு இராணுவத்தினரால் அனுமதி

யாழ்ப்பாணம் —

குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்ட மிதிவெடி அகற்றும் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க யாழ். மாவட்ட இராணுவத்தளபதி அனுமதி வழங்கியுள்ளார் என பலாலி படைத் தலைமையகம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பலாலி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட மிதிவெடி அகற்றும் நிறுவனங்களின் மிதிவெடிகளை அகற்றுவதற்கான பிரதிநிதிகள் மீண்டும் அனுமதியை வழங்குமாறு கேட்டனர்.

இதற்கமைவாகவே தொண்டு நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மனிதநேய மிதிவெடி அகற்றும் பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டதாக வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : பா.கஜானன்
முகவரி : சாந்தை.

அகவை நான்கு



பெயர் : க.தக்ஷாயினி
முகவரி : நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு: ..........
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
..........
பெற்றோர் ஒப்பம்


# அடிகாயங்களுக்கு உள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் —

கொடிகாமம் - மந்துவில் பகுதியில் அடிகாயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில் மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வேலன் நடராசா (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் கள்ளுத்தவறணை ஒன்றில் இவர் அடித்துப் படுகாயப்படுத்தப்பட்டார்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட போதும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார். சடலம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியின் உத்தரவுக்கமைய விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவரின் மருமகன் கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சை!

யாழ்ப்பாணம் —

இலங்கை அதிபர் சேவையின் இரண்டாம் வகுப்பின் II ஆம் தரத்தில் சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தப்படவிருந்தபோதும், நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக விண்ணப்பம் செய்யத் தவறியவர்களுக்கு விண்ணப்பம் செய்வதற்கான காலஅவகாசம் வழங்கப்பட்டமையால் பரீட்சை பிற்போடப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கான புதிய அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் இந்த திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நையப்புடைக்கப்பட்ட திருடன் வைத்தியசாலையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் —

சுதுமலைப்பகுதியில் வைத்து பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட திருட்டு சந்தேக நபர் நேற்றுமுன்தினம் அதிகாலை வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கடுமையாகத்தாக்கப்பட்டு வெட்டுக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட மேற்படி நபர் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நபர் பற்றிய சரியான விபரங்கள் கிடைக்காததால் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# புத்தூர் சந்தியருகே கிளைமோர் மீட்பு!


யாழ்ப்பாணம் —

தென்மராட்சி - மீசாலை, புத்தூர் சந்தியில் சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்ட கிளைமோர் குண்டு படையினரால் மீட்கப்பட்டு வெடிக்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் ஏ - 9 வீதியில் மீசாலை - புத்தூர் சந்தியில் வீதியோரமாக நின்ற சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்ட கிளைமோர் குண்டே அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரால் மீட்கப்பட்டு வெடிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிளைமோர் குண்டு படையினரின் வாகனத்தை இலக்கு வைத்தே பொருத்தப்பட்டிருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் நடைபெற்ற மேதின நிகழ்வுகளிலிருந்து



## தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தின் அகில இலங்கை வர்த்தக சம்மேளனத்தால் தொழில் வாய்ப்பு, தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று சம்மேளன அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அதிகாரி எஸ். சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 14 கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வேலை வாய்ப்பு தொடர்பான படிவங்கள் பூர்த்தி செய்தல், தொண்டர்கள் நியமித்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (201)

## பதிவுகளை மேற்கொள்ளவும்

மன்னார்—

மன்னார் மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை "தருண அருண" திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னார் பிரதேச செயலகத்தில் திட்டமிடல் பிரிவில் சகல வேலையற்ற பட்டதாரிகளும் தமது பட்டச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாளஅட்டை, கல்விச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் சமூகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (201)

# யாழ். குடாநாட்டு மக்களை மீட்கும் நாள் விரைவில்!

## தளபதி லோறன்ஸ் தெரிவிப்பு

ஆனையிறவு—

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரால் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைத் தொடர்ந்தும் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் வட போர்முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான லோறன்ஸ் தெரிவித்தார்.

ஆனையிறவுப் பகுதியில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்து போராட முன்வந்தவர்கள்.

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் இராணுவத்தினரின் தொடர் அவலங்களால் இடம் பெயர்ந்து வருகின்றனர். இதனை எவராலும் அனுமதிக்க முடியாது. நாம் பொறுமை இழந்தால் எமது தேசத்தில் எமக்கு முன்னால் உலகில் எந்தச் சக்திகளாலும் நின்று பிடிக்க முடியாது.

எமது மக்களின் அவலங்களைக் கண்டு பொறுமை இழந்து வருகின்றோம். அதனால்தான் நூற்றுக் கணக்கான மக்கள் அணிதிரண்டு எம் பின்னே வருகின்றார்கள்.

குடாநாட்டு மக்களே! உங்களை நாங்கள் மீட்கும் நாள் விரைவில் வரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

மன்னார்—

நிகொட் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் கடற்தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த வன்செயலால் கணவனை இழந்த, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் கடற்தொழிலாளர்களுக்கு 95 வீடுகளும், விதவைகளுக்கு 44 வீடுகளும் தெரிவு செய்யப்பட்ட பட்டியலின் பிரகாரம் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடும் 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது. இதன் கட்டட வேலைகளை கடற்தொழிலாளர் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன மேற்பார்வை செய்து வருகின்றன. (201)

## பாடசாலையை தரமுயர்த்த கோரிக்கை

மன்னார்—

மன்னார்- சாந்திபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடிப்படை வசதியற்ற நிலையில் நீண்டகாலமாக இயங்கிவருகின்றது.

இந்த பாடசாலையில் தரம் 5 வகுப்பு வரை மட்டுமே இயங்கி வருகிறது. இதனால் இந்தப் பாடசாலையைத் தரமுயர்த்தி ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதி போன்றவற்றை நிவர்த்தி செய்யுமாறு இந்த மக்களால் கல்வி திணைக்களத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (201)

# மனிதாபிமான உதவிகளுக்கு தடைவிதிப்பது அப்பட்டமான போர்க் குற்றமாகும்

## தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் றெஜி

புதுக்குடியிருப்பு—

கிழக்கிலங்கையில் தாக்குதலால் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கு இராணுவத்தினர் தடைவிதிப்பது அப்பட்டமான போர்க் குற்றம் என தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைமைப் பணிப்பாளர் றெஜி தெரிவித்தார்.

ரி.ரி.என். தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மூதூரில் 2 நாட்களாக முப்படைகளும் நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு தொண்டு நிறுவனங்களுக்குப் படையினர் தடை விதித்து வரும் நிலையில் - உடனடி உதவிகளை வழங்கும்படி அனைத்துலக தொண்டு நிறுவனங்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றின் தனமனைகளுக்குச் சென்றிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பணிப்பாளர் றெஜி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனைத்துலகப் பணிப்பாளர் நாகா நாகேந்திரன் ஆகியோர் மூதூரில் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலைமையையும் எடுத்து விளக்கியுள்ளனர்.

படையினரின் நடவடிக்கையால் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதவாறு பார்த்துக் கொள்ளுமாறும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அனைத்துலக தொண்டர் அமைப்புக்களிடம் கேட்டுள்ளது.

# பேரினவாத செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் அனைவரும் செயற்பட வேண்டும்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம்

புதுக்குடியிருப்பு—

தமிழ் மக்களை அழிக்கும் நோக்கிலான சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் ஒருமித்த செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களை அழிக்கும் வகையிலான செயற்பாடுகளில் மகிந்த அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. அனைத்து பேரினவாதக் கட்சிகளும் கொள்கை பேதமின்றி அவரின் கொள்கைகளுக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் தமிழ் மக்களை அழிக்கும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் ஒருமித்த அடக்குமுறைச் செயற்பாட்டுக்கு எதிராக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# வங்காலையில் குடும்பஸ்தர் அடித்துக் கொலை

மன்னார்—

மன்னார்-வங்காலையில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத குழுவினரால் அடித்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார்.

வங்காலை அக்னேஸ்புரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விடத்தல் தீவைச் சேர்ந்த எட்வின் யோகராசா (வயது-32) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

இவரது சடலம் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மன்னார் மாவட்ட நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் மன்னார் வைத்தியசாலைக்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (மோ)

# சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கு தமிழீழத்தை விரைவில் பெற்றுக்கொள்வோம்

## கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த மா.சிவபாலன்

கிளிநொச்சி—

தொடர்ந்து ஒடுக்கப்படுகின்ற, ஏமாற்றப்படுகின்ற இனமாக நாங்கள் வாழவேண்டுமா? என்பதைச் சிந்தித்து செயற்படவேண்டிய ஒரு கட்டத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் இன்று தள்ளப்பட்டுள்ளோம் எனக் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் சேர்ந்த மா.சிவபாலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியத்தின் தாயக பூமியான திருகோணமலை நகரம் இன்று சிங்கள இனவெறி அரசாலும், சிங்கள காடையர்களின் அடாவடித்தனங்கள் மூலமாகவும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு, சிங்களக் குடியேற்றமாக மாற்றுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

திருகோணமலை நகரில் இராணுவத்தினரின் முன்னிலையில் சிங்களக் காடையர்களால் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட வண்ணமுள்ளார்கள். போர் நிறுத்தம் என்ற போர்வையில் கிபிர் விமானங்களின் குண்டு வீச்சாலும் தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டும், தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் வருகின்றனர்.

தமது இருப்பிடங்களிலிருந்து மக்கள்விரட்டியடிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

சிங்களக் காடையர்களின் அடாவடித்தனத்தை தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் இதுவரை முன்வராதது வேதனைக்குரியது.

எனவே, எமது தாயக மண்ணை எதிரியிடமிருந்து மீட்டு எமது மண்ணில் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கும், சுதந்திரமாக தமிழீழத்தை விரைவில் பெற்றுக் கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (09)

# பேசாலையில் கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்கள் விடுதலை!

மன்னார்—

மன்னார் பேசாலை அகதி முகாமில் கைதுசெய்யப்பட்டவர்களில் மூன்று பேர் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மன்னார் பேசாலை அகதி முகாமை கடந்த ஞாயிற்றுக்கிழமை பெருமளவு கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலில் பெண் உட்பட எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 5 பேர் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய மூன்று பேரும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிபதி ரி.கே.பாஸ்கரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட வேளை -குறித்த மூன்று நபர்களையும் பத்தாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்த நீதிபதி குறித்த மூன்று நபர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (மோ)

# எல்லைப்புற சிங்களவருக்கு ஆயுதங்கள் வழங்க முடிவு!

கொழும்பு —

வன்னிப் பிரதேசத்தில் தற்போது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கிராமத்தவரின் பாதுகாப்புக்காக ஆயுதங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வன்னிப்பிரதேச பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஊர்காவல் படையினருக்கு மேலதிகமாக கிராமங்களிலுள்ள பிரஜைகள் குழு மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள கிராமங்களில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகளால் தீவுச் சேனையில் துணை ஆயுதக்குழுக்கள் மீதான தாக்குதலை அடுத்து பொலனறுவையில் உள்ள மக்களுக்குப் படையினரால் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன.

இதேபோல் புல்மோட்டை கடற்கரையில் நடந்த தாக்குதல்களை அடுத்தும் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்ட இடங்களில் சிங்களவரைக் காப்பாற்றும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்பில் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக 10 ஆயிரம் துப்பாக்கிகள் பொலிஸாரால் வழங்கப்படவுள்ளதாகப் புல்மோட்டை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து சிங்கள மக்களைக் காப்பாற்றவே இந்த ஆயுதங்கள் வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# இராணுவத் தலைமையக குறைபாடு உலகமெங்கும் தெரிந்து விட்டதாம்!

## முன்னாள் இராணுவத்தளபதி

கொழும்பு —

இராணுவ தலைமையகத்தின் பாதுகாப்புக் குறைபாடு இப்போது உலகம் முழுவதும் தெரிந்து விட்டது என முன்னாள் இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது -

நாட்டின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமான பொறுப்பு அந்த நாட்டின் இராணுவம் உட்பட முப்படையினரிடமே கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய பெரும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள இராணுவத்தின் தலைமையகத்துக்கு தற்கொலைதாரி உட்புகுந்துள்ளதால் அங்கு போடப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதனை சிறு சம்பவம் என்று ஒதுக்கிவிட முடியாது. இராணுவத் தலைமையகத்தினுள் இத்தகைய குறைபாடுகள் இருப்பதானது - நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையால் யுத்தத்தால் ஏற்படவிருந்த உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டபோதிலும் அதனூடாக விடுதலைப் புலிகளால் நாட்டின் அனைத்து இடங்களுக்கும் ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்தால் இராணுவத் தலைமையகத்தில் இருந்த பெரும் குறைபாடு முழு உலகத்துக்கும் தெரியவந்துள்ளது.

ஏனெனில், இராணுவம் நாட்டின் பாதுகாப்புக்காகவே இருக்கவேண்டும். அப்படியாயின் முழுநாட்டினதும் பாதுகாப்பை ஏற்றுள்ள இராணுவத் தலைமையகத்தினுள் தற்கொலை குண்டுதாரி உட்புகுந்து, அழிவை ஏற்படுத்தியிருப்பதன் ஊடாக அதன் பாதுகாப்பில் பெரும் குறைபாடுகள் உள்ளமை தெரிகிறது. அதனால் அதை சிறு விடயமாக ஒதுக்கிவிட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# புலனாய்வு அதிகாரி வீட்டிலிருந்த சினைப்பர் துப்பாக்கி பறிமுதல்

கொழும்பு —

புலனாய்வுத்துறை அதிகாரியாக பணியாற்றிய வேளை காணாமற்போன டி.ஜயரட்ணம் குடும்பத்தினரது வீட் டில் இருந்த சினைப்பர் துப்பாக்கியை இராணுவத்தினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இராணுவம் மற்றும் கல்கிசை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஜயரட்ணம் குடும்பத்தினர் வசித்து வந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் இது பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தச் சினைப்பருடன் தூரப் பார்வைக் கண்ணாடியும் பொருத்தப்பட்டிருந்தது.

ஜயரட்ணம் வசித்து வந்த வீட்டில் அவர் காணாமல் போன பின்னர் அவரது குடும்பத்தினர் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் சினைப்பர் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜயரட்ணம் குடும்பத்தினர் வசித்த குடியிருப்பின் வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்த போதும், உள்ளே நடமாட்டம் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# மண் அகழ்ந்தோர் மீது வெலிஓயாவில் தாக்குதல்

அநுராதபுரம் —

வெலிஓயா பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது நேற்றுமுன்தினம் காலை இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும், இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் வெலிஓயா - புல்மோட்டை வீதியில் தலகஸ்வெவ சந்திக்கு அருகில் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த நான்கு பேர்மீது மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் துப்பாக்கிச் சூடுநடத்தினர்.

இதில் இருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமுற்றனர். அதேவேளை, மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த மேலும் ஐந்து மீனவர்களைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

# புத்தளத்தில் தேடுதல் 83 தமிழர்கள் கைது

கொழும்பு —

புத்தளம் மாவட்டத்தில் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் 83 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆராச்சிக்கட்டு, சிலாபம், மாரவில, வென்னப்புவ, தன்கொடுவ மற்றும் நாத்தாண்டியா ஆகிய பகுதிகளில் பல்வேறு தொழிற்சாலைகளில் பணியாற்றிய 2 பெண்கள் உட்பட 83 பேரை சிறப்புத் தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, களுவாஞ்சிக்குடி, வவுனியா மற்றும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேபோல் பதுரலியவில் விடுதலைப் புலி சந்தேக நபர் எனக் கருதி தமிழ்ப்பெண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட அந்தப் பெண் ஞானேந்திரம் தமிழ்வாணி என்றும் அவர் உரிய ஆவணங்கள் எதனையும் பொலிஸாரிடம் கையளிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

மதுகம பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியலால் திஸநாயக்க, புலனாய்வுத் துறையினர் மற்றும் சிறப்பு விசாரணைப் பிரிவினர் அந்தப் பெண்ணிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓமந்தையிலிருந்து 3 படையினர் ஓட்டம்

கொழும்பு —

வவுனியா ஓமந்தையிலிருந்து படையினர் மூவர் கடந்த சனிக்கிழமை தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய மூவரையும் பிடிப்பதற்காக அந்தப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்களின் வாகனங்களைப் படையினர் கடுமையாகச் சோதனையிட்டனர்.

அண்மைக்காலத்தில் படையிலிருந்து தப்பியோடுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வவுனியாவிலிருந்தும், மன்னாரிலிருந்துமே படையினர் தப்பியோடி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் படையினர் தப்பியோடும் மனநிலையில் இருக்கின்றபோதும் அவர்களால் தென்னிலங்கைக்குத் தப்பிச்செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது.

அரசினால் கவர்ச்சிகரமான வாக் குறுதிகள் வழங்கப்படுகின்ற போதும் படையினர் தப்பியோடிக் கொண்டிருப்பது அதிகரித்தே வருகின்றது.

இதுவரை தப்பியோடிய படையினரின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைத் தாண்டிவிட்டதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

# சிகிச்சை பெற்று வந்த தமிழ் பெண் கைது!

கொழும்பு —

கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற தமிழ் பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சவுதி அரேபியத் தூதுவர் மற்றும் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன ஆகியோர் உட்பட பலர் கம்பளை வைத்தியசாலையில் பங்கேற்க இருந்த கூட்டத்தையொட்டி நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் அந்தப்பெண் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண் கம்பளை பதில் நீதிபதி எம்.குசைன் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சவுதி அரசாங்கத்தின் உதவியுடன் மருத்துவ உபகரணங்களை கம்பளை வைத்தியசாலைக்கு கையளிப்பதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வுக்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக மருத்துவமனை சிகிச்சைப் பிரிவுகளை சோதனையிட்ட போது தனது அடையாளத்தை சரிவர உறுதிப்படுத்த முடியாததால் அந்தப்பெண் கைது செய்யப்பட்டார்.

அவர் சில நாட்களுக்கு முன்னர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார்.

தங்கியிருக்கும் இடம் தொடர்பாக குறித்த பெண் தெரிவித்த தகவல்களை நம்ப மறுத்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

# சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலை தொடர்பான விசாரணை தேவையற்றதா?

## பொலிஸாரிடம் நீதிபதி கேள்வி

கொழும்பு —

யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் தற்போது பொலிஸாருக்குத் தேவையற்ற ஒன்றாக ஆகிவிட்டதா என்று கொழும்பு நீதிபதி சறோஜினி குசல வீரவர்த்தன கேள்வி எழுப்பினார்.

இந்தக் கொலை தொடர்பான மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணை அறிக்கை எதனையும் தாக்கல் செய்யாததால் இந்தக் கேள்வியை நீதிபதி எழுப்பினார்.

கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, விடுதலைப்புலி உறுப்பினரான கோபி என்பவர் கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார்.

எனினும், சாட்சியாளர்களால் அவர் அடையாளம் காணப்படாமையால் அவர் பிணையில் விடுதலை செய்யப்பட் டார்.

இந்த வழக்கில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸாரின் கருத்துக்களைக் கேட்ட நீதிபதி கொலை பற்றிய விசாரணைகள் தற்போது பொலிஸாருக்குத் தேவையற்ற ஒன்றாகி விட்டதா? என்றார்.

இது தொடர்பாக எடுக்கப்படவுள்ள மேலதிக நடவடிக்கைகள் பற்றி தெரிவிப்பதற்காகக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள பொறுப்பதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். வழக்கு விசாரணை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

# வெல்லா வெளியில் படையினர் தொடர் ஷெல் தாக்குதல்கள்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு- வெல்லாவெளிப் பிரதேசத்தில் படையினர் நேற்று முன்தினம் காலை ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

வெல்லாவெளி 38 ஆம் கிராமம் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன், ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர்.

இதனால் அங்கிருந்து 83 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றன.

36 ஆம் கொலனியிலுள்ள அதிரடிப் படையினரும், வவுணச்சேனையிலுள்ள அதிரடிப்படையினரும் சேர்ந்து 38 ஆம் கிராமத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு, ஷெல் தாக்குதல் களையும் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சின்னத்தம்பி சிவானந்தம் (வயது 56) என்பவர் படுகாயமடைந் தார்.

இதேவேளையில் 36 ஆம் கொலனி கிராமத்துக்குச் சென்ற விவசாயிகள் மீது விசேட அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவங்களால் இடம்பெயர்ந்த மக்கள் - உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இடப் பெயர்வின்போது சிலர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பொன்சேகா மீதான தாக்குதல்; நான்கு குழுக்கள் விசாரணை!

கொழும்பு —

இராணுவத் தலைமையகத்தினுள் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மற்றும் இராணுவத் தளபதி மீதான கொலை முயற்சி குறித்து விசாரணை செய்வதற்கு நான்கு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கோரிக்கைக்கமையவே இந்த நான்கு விசேட பொலிஸ் குழுக்களும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்கொலைக் குண்டைப் பெண் ஒருவரே கொண்டு வந்துள்ளார். இந்தச் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இராணுவ வைத்தியசாலைக்குச் சமுகமளித்த அனைவரும் தனித்தனியே விசாரிக்கப்பட்டு வருகின்றனர். விசாரணையில் கிடைக்கும் ஒவ்வொரு தகவலும் தனித்தனியே ஆராயப்படும்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலை அடுத்து கொழும்பும், கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் கிடைத்த தகவல்களும் விசாரணைக்குச் சேர்க்கப்படவுள்ளன. தேடுதல் நடவடிக்கையில் கொழும்பு பிரதேசத்தில் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது.

இந்தத் துப்பாக்கி தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

The Leading Daily of Tamils' Homeland

# சலூனுக்குள் துப்பாக்கிச்சூடு திருநெல்வேலியில் குடும்பஸ்தர் பலி



யாழ்ப்பாணம் —

திருநெல்வேலிச் சந்தியிலுள்ள சிகை அலங்காிப்பு நிலையமொன்றில் நேற்று இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார், மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் உயரப்புலம் - ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வர்த்தகரான அருமைராசா தெய்வேந்திரம் (வயது 54) என்பவரே உயிரிழந்தார். கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அலங்காிப்பு நிலைய உரிமையாளரான வல்லிபுரம் சுகந்தன் (வயது 30) என்பவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

திருநெல்வேலிச் சந்திக்கருகிலுள்ள சிகை அலங்காிப்பு நிலையத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் சிகை அலங்காிப்பு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிகை அலங்கரிக்கப்பட்டுக்கொண்டிருந்தவரான தெய்வேந்திரம் தலையில் துப்பாக்கிச் சூடுபட்டு பலத்த காயங்களுடனும்,

சிகை அலங்கரித்துக்கொண்டிருந்த சுகந்தன் வயிற்றுப் பகுதியில் படுகாயமடைந்த நிலையிலும் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் - தெய்வேந்திரம் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (82)

## காணாமற்போன குடும்பஸ்தர் புதைகுழியில் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு சங்கபுரத்தில் காணாமற்போன ஒருவர் வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

எஸ்.ஆறுமுகம் (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 24ம் திகதி சங்கபுரத்திலுள்ள வீடொன்றில் படம் பார்ப்பதற்காக சென்றிருந்த வேளை காணாமல் போயிருந்தார்.

காணாமல் போனவரை உறவினர்கள் எங்குதேடியும் கிடைக்காத நிலையில் நேற்று வீட்டு முற்றத்தில் கடிதம் ஒன்று வீசப்பட்டிருந்தது. அந்த கடிதத்தில் குறித்த நபர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து குறித்த இடத்திற்கு சென்ற அவரது உறவினர்கள் புதைக்கப்பட்டிருந்த சடலத்தினை மீட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

## கொடிகாமத்தில் ஓட்டோ சாரதி நேற்றுக்காலை சுட்டுக்கொலை



யாழ்ப்பாணம் —

கொடிகாமம் பகுதியில் நேற்றுக் காலை ஓட்டோ சாரதியொருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று காலை 11 மணியளவில் ஓட்டோ தரிப்பிடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்வரட்ணம் மதுசீலன் (வயது30) என்பவரே உயிரிழந்தவராவார்.

வழமை போன்று ஓட்டோ தரிப்பிடத்தில் நின்றிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரை சுட்டு கொன்று விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## இராணுவ சிப்பாய் சுட்டுக்கொலை

வவுனியா —

வவுனியா-மடுக்காரம்பளையில் நேற்று இராணுவச் சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாண்டிக்குளம்-கல்மடு வீதியில் நின்ற சிப்பாய்கள் மீது மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டு தப்பித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் லியனகே என்ற இலகு காலாற்படையைச் சேர்ந்த சிப்பாயே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

## புலிகள் பிரதேசம் மீது படையினர் ஷெல் தாக்குதல்

திருகோணமலை —

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான இறால்குழி மற்றும் நாவலடி பகுதிகளை நோக்கி நேற்று எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று காலை 9 மணிக்கு இறால்குழி பகுதியில் இருந்து இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். அத்துடன், நாவலடியில் விடுதலைப் புலிகளின் காவலரண் நோக்கி கடற்படையினர் பாரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தினர். இதன் போது பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஏற்பட்ட மோதல் நிலை தணிந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து இறால்குழி மற்றும் நாவலடி பகுதியிலிருந்து பெருமளவான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுள்ளனர்.

## கவச வாகனம் புரண்டு ஆறு படையினர் காயம்

அனுராதபுரம் —

இராணுவத்தின் பவள் கவச வாகனம் தந்திரிமலையில் கவிழ்ந்ததில் 6 படையினர் படுகாயமடைந்தனர்.

தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து செட்டிக்குளம் நோக்கி அதிவேகத்தில் சென்ற இந்த வாகனம் மல்வத்து ஓயா பாலமருகே கவிழ்ந்தது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த படையினர் அனைவரும் அனுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தாக்குதல் அச்சத்தின் காரணமாகவே வனப் பகுதியில் பவள் கவச வாகனம் அதிவேகத்தில் சென்றதாக இராணுவத் தரப்பினர் தெரிவித்தனர்.

## உதயன் அலுவலக...

அங்கு பத்திரிகை மடித்துக் கொண்டிருந்த ஊழியர்களை நிலத்தில் படுக்குமாறு உத்தரவிட்ட னர்.

அப்போது தலைநிமிர்த்திப் பார்த்த ஊழியர் ஒருவரை சப்பாத்துக் கால்களால் ஏறிமிதித்த பின்னர் ஆசிரிபீட பிரதம செய்தியாளர் குகநாதனை காட்டுமாறு இழுத்துச் சென்றனர்.

ஆசிரியபீட பிரதான வாசல் கதவு பூட்டப்பட்டிருந்ததால் காலால் உதைத்து திறக்கமுறப்பட்டனர். அது முடியாது போகவே துப்பாக்கியால் சுட்டு கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றபோது அங்கிருந்தோர் அச்சத்தினால் வேறு பகுதிக்குள் புகுந்து ஒளித்துக் கொண்டதால் ஆயுதபாணிகள் ஆத்திரம்கொண்டு அங்கிருந்த கணனிகள் மற்றும் அலுவலக கண்ணாடிகள் மீது கண்மூடித்தன மாகச் சுட்டு சேதப்படுத்தினர்.

பின்னர் இழுத்துச் சென்ற விநியோகப் பகுதி ஊழியரை கூட்டிவந்து விநியோகப் பிரிவுக்குள் வைத்து சுட்டுக்கொன்ற பின்னர் ஆயுதக் குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்தத் தாக்குதலில் பங்குகொண்டவர்கள் உதயன் அலுவலகத்துக்கு அருகிலுள்ள ஒழுங்கை ஊடாக வந்து அங்கு மோட்டார் சைக்கிள்களை நிறுத்திவிட்டு மதிலேறிப் பாய்ந்தே அலுவலகத்துக்குள் உட்புகுந்ததாகவும் இவர்கள் சரளமாக தமிழில் கதைத்ததாகவும் தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கிருந்த ஊழியர்கள் அச்சத்தால் ஓடி அயலிலுள்ள வீடுகளில் தஞ்சமடைந்தனர்.

அதேவேளை - ஆயுதபாணிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்ட போது அலுவலகத்தின் தொலைபேசி இணைப்புக் களையும் துண்டித்து விட்டனர். இதனால் இந்தச் சம்பவம் இடம்பெற்றது குறித்து அங்கிருந்தோரால் உடனடியாக வெளியிடங்களுக்கு அறிவிக்க முடியாதுபோனது.

சற்றுநேரத்தின் பின்னர் அங்கு சென்ற இரவுக் கடமை ஊழியர்களே இறந்தவர்கள் மற்றும் காயமுற்று முனகியவர்களைக் கண்டுவிட்டு ஓடிவந்து இந்த விபரங்களை வெளியிட்டனர்.

இது தொடர்பாக யாழ்.மேலதிக நீதிபதி, வைத்தியசாலை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதை யடுத்து யாழ்.மேலதிக நீதிபதி பொலிஸாருக்கு இந்த விடயத்தைத் தெரியப்படுத்தி சம்பவ இடத்தைச் சென்று பார்வையிடுமாறு பணித்தார்.

நீண்டநேர தாமதத்தின் பின்னரே பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றதுடன் காயமுற்றவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த - சந்தைப்படுத்தல் முகாமையாளரான தேவசகாயம் சுரேஷ் (வயது 35), நாவற்குழியைச் சேர்ந்த - விநியோகப் பகுதியைச் சேர்ந்த எஸ்.ரஞ்சித்குமார் (வயது 28) ஆகியோர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

விநியோகப் பகுதி ஊழியர்களான மானிப்பாயைச் சேர்ந்த உதயகுமார் (வயது 48), மற்றும் வடமராட்சியைச் நா. தயாகரன் (வயது 24) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

பலத்த பாதுகாப்புமிக்க யாழ்.நகரப் பகுதியில் நேற்றுமாலை படையினர் வீதியால் சென்ற அனைத்து வாகனங்களையும் மறித்து உடற்சோதனை செய்திருந்தனர்.

இந்தநிலையிலேயே ஆயுதக்குழுவினர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்...

ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்புக்காக செயற்படும் அமைப்புக்களும், சர்வதேச ஊடகங்களும் இதனைக் கண்டிப்பதுடன் இத்தகைய அநியாயங்கள் தொடராமல் தடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும். தமிழ் ஊடகங்களுக்கு விடப்படும் இத்தகைய அச்சுறுத்தல்கள் ஒருபோதும் ஜனநாயகத்தையோ, சமாதானத்தையோ தோற்றுவிக்க உதவாது. அரசினதும் அதன் ஒட்டுப்படைகளினதும் உதயன் பத்திரிகை மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட உதயன் பத்திரிகை பணியாளர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஊடக அமைச்...

அவரது தனிப்பட்ட இல்லத்தில் நடைபெற்ற இந்த விருந்துபசாரத்துக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் உதயன் மீதான தாக்குதலை அறிந்ததும் அமைச்சரிடம் கண்டனம் தெரிவித்துவிட்டு விருந்துபசாரத்தில் பங்கேற்காமலேயே அங்கிருந்து வெளியேறினர்.

## படையினர் ஊடுருவி தாக்குதல் பெண் விவசாயி படுகொலை!

மன்னார் —

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான மடுப்பகுதிக்குள் ஊடுருவிய இராணுவத்தினரால் சிவஞானசுந்தரம் கல்யாணி (வயது 50) என்ற விவசாயி படுகொலை செய்யப்பட்டதாக தமிழீழ காவல்துறையினர் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திலேயே சிவஞானசுந்தரம் கலாராணி உயிரிழந்தார்.

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த வீரையா ஜெயலட்சுமி (வயது 50) மற்றும் உடையப்பன் வீரப்பன் (வயது 60) ஆகியொர் அடம்பன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நெல் மூட்டைகளுடன் விவசாய காணிகளிலிருந்து வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினரால் மன்னார் மாவட்டம் சின்ன வலயன்கட்டுப் பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தமிழீழ காவல்துறையினர் தெரிவித்த னர்.

பாலம்பிட்டியிலிருந்து 10 கிலோ மீற்றர் கிழக்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30



மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30



நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந்த் ,மீரா ஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
மெர்க்குரிப்பூக்கள்
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2008 பிரிவு 2
கலை, வர்த்தகம்
ஆரம்பம் மே 6 சனி 8.00 மணி
[5308]

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No: 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் 24-04-2006 முதல் பெற்றுக் கொள்ளலாம்.
Special Classes
On-Line Classes
* Dip.in PC Application & Office Management
(MS Office syllabus included)
* Dip.in Desktop Publishing
Work shop
PC Maintenance & Repairs
விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் வார நாட்களில் தொடர்பு கொள்ளவும்
வகுப்புக்கள் ஆரம்பம் 10-05-2006
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-
Centre for Information Technology
-Executive Officer

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.